# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வத்தமானப் பத்திரிகை

අංක 13,335—1962 ඔක්තෝබර් 5 වැනි සිකුරාද—1962.10.5

13,335 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | .. |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | .. |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | 536 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 535 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைச் சட்டம்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம் காரியத் தொழிற் சம்பளச் சபையில் 1962 ம் ஆண்டு மே மாதம் 17 ந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு அங்கம் வகித்தற்கு, பின்வரும் பேர்வழிகளை கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டுச் சம்பளத் தீர்ப்புச் சங்க விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப் படுகிறது.

வி. சா. ம. த மெல்,
தொழில் தேசியமய சேவை மந்திரி
காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 25 ந் உ.

#### நியமன அங்கத்தவர்கள்

1. திரு. எஸ். வ. விஜயதிலக
2. திரு. ஏ. அபேக்கூன்
3. டக்றர் வர்ணசேன ரசபுத்ரம்

#### முதலாளிகளின் பிரதிநிதிகள்

1. திரு. ரீ. ஜே. பீரிஸ்
2. திரு. ஜே. அபயவிக்ரம
3. திரு. சி. எஸ். இசற் பர்னுந்தோ
4. திரு. ஆர். எச். டி மெல்
5. திரு. மெரில் ஏ. பர்னுந்தோ
6. திரு. ஆர். எப். எஸ் டி மெல்

#### தொழிலாளரின் பிரதிநிதிகள்

1. திரு. எம். ஜி. மெண்டிஸ்
2. திரு. எஸ். சியதோரிஸ்
3. திரு. உவால்றர் ஜோதிபால
4. திரு. கே. கே. அபிதிஅப்பு
5. திரு. எச். சி. வெடிவர்த்தன
6. திரு. ஏ. டி ரூபன் சில்வா

10-133

### கடற்றொழிற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) பிரிவு 20 (3) இன் கீழ் அறிவித்தல்

கடற்றொழிற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) பிரிவு 20 (3) இன் நியதிகளின்படி, கௌரவ சி. பீ. டி சில்வா, விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மின்விசை அமைச்சரவர்கள், ஒரு புறத்தில் புத்தள மாவட்டத்தில் சின்னப்பாடு, கண்டத்தொடுவால என வழங்கும் மீன்பிடி நிலையங்களிலமைந்துள்ள ஒன்று முதல் இருபத்து மூன்று வரையுமுள்ள பாடுகளில், கரைவலையை உபயோகித்து மீன்பிடிக்கின்றவர்களுக்கிடையிலும் மறுபுறத்தில், சின்னப்பாடு, கண்டத்தொடுவாவ எனும் மீன்பிடி நிலையங்களை அணைந்துள்ள நீரகத்தில் மீன்பிடிக்கும் தெப்ப மீன்பிடியாளர்களுக்குமிடையில் இந்த நீரகங்களில் அவரவர்களுக்குரிய மீன்பிடி உரிமைகளையிட்டு எழுந்துள்ள தகராற்றை பகிரங்க விசாரணைக்கும் அறிக்கைக்குமாக எனக்கு ஒப்படைத்துள்ளார்.

2. தகராற்றையிட்ட விடயம் பின்வருமாறு :—

கரைவலை மீன்பிடியாளர்கள், தங்கள் பாடுகளை அணைந்துள்ள நீரகம், சரித்திரத்திற்கப்பாற்பட்ட காலம்தொட்டு கரைவலை மீன்பிடிக்காக மாத்திரம் புறநீங்கலாகப் பாவிக்கப்பட்டுவந்ததென உரிமை கோருகின்றனர். இந்த நீரகத்தில் தெப்பத்தால் மீன்பிடித்தல் தங்கள் மீன்பிடியை எதிரிடையாய்ப் பாதிக்கின்றதெனக் குற்றம்சாற்றி, கரைவலை மீன்பிடிக்காலத்தில் தெப்ப மீன்பிடியை முற்றும் விலக்கிவைக்கவேண்டுமென வேண்டுகின்றன.

தெப்ப மீன்பிடியாளர்கள், இந்த நீரகத்தில் நீண்டகாலமாய் இவ்வித மீன்பிடியைச் செய்துவருகின்றனரென்றும் இந்த நீரகத்தில் தங்களுடைய மீன்பிடிச் செயலாற்றல்கள் கரைவலை மீன்பிடியாளர்களால் தடைப்படுகின்றதென்றும் கூறுகின்றனர். தங்கள் மீன்பிடிச் செயலாற்றல்களை எவ்வித தடையோ, பங்கமோ இல்லா செய்துவர அனுமதிக்கப்பட வேண்டுமென அவர்கள் வேண்டுகின்றனர்.

3. இதுவரையும் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் தகராற்றுக்குரிய எல்லா விடயங்களும் வகுத்துரைக்கப்படாதிருக்கக் கூடுமாகையால் மேலே சுருங்கக் குறிப்பிட்டுள்ளவாறு தகராற்றோடு சம்மந்தப்பட்ட அல்லது இடைநேரும் விடையங்கள் எதையும் இட்டு விசாரித்து அத்தகைய எல்லா விடயங்களையுமிட்டு எமது அறிக்கையைத் தயாரிக்குமாறு யான் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றேன்.

4. இத்தகராற்றோடு சம்பந்தப்பட்ட அல்லது அக்கறை கொண்டுள்ள எல்லோரையும் இத்தகராற்றோடு சம்பந்தப்பட்ட எழுத்துமூலமான முறைப்பாடுகளை அங்ஙனம் செய்யவிரும்பின், கடற்றொழில் அதிபரவர்களுக்கு, த. பெ. இல. 531, காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள அன்னவர் காரியாலயத்திற்கு 1962 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு செய்யும்படி யான் கேட்டுக் கொள்கிறேன்.

5. இத்தகராற்றின் விடயத்தையிட்டு வத்துளுவை, சுற்றுப்பயண வங்களாவில் (சேர்குயுட் வங்களா) 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7,8,9, ந் தியதிகளில் தினமும் மு. பகல் 10 மணிக்கு அல்லது இஃது ஒத்திபோடப்படும் ஏனைய தினங்கள் எதாவதொன்றில் பகிரங்க விசாரணையொன்றை யான் ஆரம்பிப்பேன். பகிரங்க விசாரணையின்போது, சத்தியத்தின் மீது வாக்குமூலமான அல்லது தஸ்தாவேசுவான சாட்சியங்களை யான் கேட்பேன். சமூகமளிக்க அருகதையும் தங்கள் முறைப்பாடுகளுக்கு ஆதாரமாகச் சாட்சியமும் அளிக்கும் யாவரும் நேராகவோ அல்லது வக்கீல் மூலமாகவோ நண்பர்மூலம்மாகவோ அல்லது பரிந்துவாதாடுவோர் மூலமாகவோ தெரிபடலாம்.

சிறில் வான் லன்ஜன்வேர்க்.

363, நாவல வீதி, இராஜகிரிய,
அக்டோபர் 1, 1962.

10–193

---

## அறிவித்தல்

### திரைப்பட ஆணைக்குழு

மேற்கூறிய ஆணைக்குழுவைக் கீழ் காட்டும் விஷயங்கள் பற்றி ஆலோசனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேன்மை தங்கிய மகா தேசாதிபதி நியமித்திருக்கிறார்.

(அ) உள்ளூர் திரைப்படத் தொழிலுக்கு அரசாங்கம் எவ்விதமான நேரடி உதவி கொடுக்கலாம்.

(ஆ) தற்போது இருக்கும் படத் தொழிலுக்குரிய படப்பிடிப்பு நிலையங்களின் வசதிகள் போதுமானவையா அல்லனவா என்றும், சிக்கனமான முறையில் திறம்பட எவ்வாறு திரைப்படங்கள் தயாரிக்கலாமென்றும், அரசாங்க திரைப்பட நிலையத்தின் எதிர்காலம் எவ்வாறு மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் கவனித்தல்.

(இ) விநியோகஸ்தர்கள் தயாரிப்பாளர்களைத் தன்னலப்படுத்திக்கொள்ளாதவாறு இருவருக்கிடையேயுமுள்ள முறையான தொடர்புகளை எவ்வாறு வைத்துக் கொள்ளல்.

(ஈ) உள்ளூர் திரைப்படங்களின் தரத்தை உயர்த்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

(உ) திரைப்பட வசனகர்த்தாக்களுக்கு ஊக்கமளிப்பதும், நுண்கலைஞருக்கும் நடிகர் நடிகைகளுக்கும் பயிற்சி அளித்தல் ஆதியனவும்.

(ஊ) திரைப்படங்களை இறக்குமதி செய்வதற்கு ஒரு அதிகார சங்கத்தை ஸ்தாபித்து அது அவற்றைப் பொறுப்பேற்று நடத்தவுமேயாம்.

2. இவ்வாணைக்குழுவிற்குப் பிரதிநிதித்துவ ஒப்பனைகள் எடுத்துக் காட்ட விரும்புவோர் கீழ் காட்டுபவருக்கு எழுத்து மூலம் 31.10.1962 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ விண்ணப்பித்தல் வேண்டும். தங்கள் கூற்றுகளுக்கு ஆதாரபூர்வமான சாட்சியங்களை ஆணைக்குழுவினருக்கு எடுத்துக்காட்டச் சித்தமுடையவர்களாவென்பதையும் விண்ணப்பித்தல் வேண்டும்.

3. ஆணைக்குழுவினர் இவர்களின் சாட்சியங்களை அறிய விரும்பின் சம்பந்தப்பட்டோருக்குக் கால எல்லையில் அறிவிக்கப்படும்.

டபிள்யு. ஆர். பி. ராஜகருணை,
காரியதரிசி,
திரைப்பட ஆணைக்குழு.

அக்டோபர் 1, 1962.

கைத்தொழில் உள்ளூர் கலாச்சார அமைச்சு,
டொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.

10–205

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### ஈட்டுச் சட்டம்

(89 ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 3 (இ), 114(2) ஆகிய பிரிவுகளின்படி எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, வர்த்தக அதிபராகிய, கினிகே றிச்சாட் வால்ரர் டி சில்வா ஆகிய நான் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக சென்றல் பினான்ஸ் கொம்பனி லிமிடெட் தாபனத்தை அங்கீகாரம் பெற்ற நிதி உதவும் ஒரு தாபனமாக இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

ஜீ. ஆர். டபிள்யு. டி சில்வா,
வர்த்தக அதிபர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு செப்டம்பர் மீ 24 ந் வ.

10—9

---

### விளம்பரம்

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க “ தொற்றுநோய்கள் ” (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டம் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4 உபபிரிவு (1) ன் விதிகளுக்கமைய 1962.7.27 ல் வெளியான 13,230 இலக்க வர்த்தமானியில் யாழ்ப்பாணம், கரைச்சி துணுக்காய் இராமநாதபுரம் முரசு மோட்டை பிரிவில் இருந்ததாக பிரகடனப்படுத்தப்பட்ட தொடைவீக்கம் என்னும் தொற்றுநோய் அங்கு தற்பொழுது அற்றுவிட்டதென்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பிரகடனம் ஈண்டு பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல் முறைக்கு வருகின்றது.

அபேரத்ன பண்டாரநாயக,
அரசாங்க பிரதம மிருகவைத்தியர்.

அரச பிரதம மிருகவைத்தியர் களரி,
பேராதனை, 24.9.1962.

10–45

### விளம்பரம்

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க “ தொற்றுநோய்கள் ” (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டம் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4 உபபிரிவு (1) ன் விதிகளுக்கமைய 1962.8.17 ல் வெளியான 13,263 இலக்க வர்த்தமானியில் யாழ்ப்பாணம், பூநகரிப் பிரிவில் இருந்ததாக பிரகடனப்படுத்தப்பட்ட தொடைவீக்கம் என்னும் தொற்றுநோய் அங்கு தற்பொழுது அற்றுவிட்டதென்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பிரகடனம் ஈண்டு பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல் முறைக்கு வருகின்றது.

அபேரத்ன பண்டாரநாயக,
அரசாங்க பிரதம மிருகவைத்தியர்.

அரச பிரதம மிருகவைத்தியர் களரி,
பேராதனை, 24.9.62.

10–46

---

**வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.**

**வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.**

**அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

# "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்)"

### வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மனி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ராறுல் " கையொப்பமிட்டப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் :

அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)

| | உள்ளூர் ரூ. | ச. | வெளியூர் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 22 | 50 | 35 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 12 | 50 | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 20 | 0 | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 25 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 50 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.